திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ள அரிசி. ஆகவே அது ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். பொது மக்களும் அதை விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆகவே, கைக்குத்தல் அரிசி நல்ல சத்துள்ள உணவு என்று கூட்டுறவுத் துறை நல்ல பிரசாரம் செய்ய முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பொதுமக்களுக்கு எது நல்லது, எது நல்லது அல்ல என்று தெரியும் என்று கருதுகிறேன். அதற்காக தனியாக பிரசாரம் எதுவும் தேவையில்லை. பொது மக்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : கைக்குத்தல் அரிசியை ஆஸ்பத்திரிகளுக்கும், ஜெயில்களுக்கும் அனுப்புவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அனுப்பியும்கூட, அவர்களுக்கு விற்பனை செய்தும்கூட, இதில் நஷ்டம் வருவதற்குக் காரணம் என்ன ? ஒரு வேளை இந்த அரிசிக்கும், மற்ற இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படுகிற அரிசிக்கும் விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? விலைகளில் ஏதாவது வித்தியாசம் இருந்தால், விலையை சீர்படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது சப்ஸிடி தருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவுத் துறையின் மூலம் தயாரிக்கப்படுகின்ற அரிசி மொத்தத்தில் ஐந்து சதவிகிதம் அதிக விலையில் தான் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிடுகிற பொழுது அநேக நோய்கள் வைடமின் சத்துக்கள் இல்லாமையினால் ஏற்படுகின்றன என்று கூறினார்கள். அப்படி இருக்கும்பொழுது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், கைக்குத்தல் அரிசியில் சத்து வன்மைகளெல்லாம் இருப்பதனால் மக்களிடையே பிரசாரப்படுத்த வேண்டும் என்று அவசியத்தை அறிந்திருக்கிறார்களா ? மக்களே புரிந்து கொள்வார்கள் என்று சொன்னார்கள். நல்ல பல திட்டங்கள் இருந்தாலும் மக்கள் அவைகளுடைய பலனை அறியாமல் இருக்கிறார்கள். ஆகவே, பிரசாரம் மிகவும் அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கைக்குத்தல் அரிசியினால் ஏற்படுகிற நன்மை மக்களுக்கு ஏற்கெனவே, தெரியும். தனியாக பிரசாரம் தேவையில்லை இந்தத் துறையிலே. இன்பர்மேஷன் அண்டு பப்ளிஸிடி டிபார்ட்மெண்டில் ஏதாவது, பிரசாரம் செய்வதாக இருந்தால் அதுபற்றி அந்தத் துறையில் நன்றாக ஆய்வார்கள் என்று கருதுகிறேன்.

1972 மார்ச் 30]

திரு. தி. பொன்னுமலை : கைக்குத்தல் அரிசி என்று சொல்லி சில கூட்டுறவுத் துறை கடைகளில் மெஷினில் அறைத்த அரிசியை வாங்கி பல ஜெயில்களுக்கும் விநியோகம் செய்கிறார்கள். அதுபற்றி என்னுடைய தொகுதியிலே கூட அமைச்சரிடத்தில் ஒரு புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி இன்னும் நடவடிக்கை இல்லை. இதைப் போல பல இடங்களில் நடைபெறுவது பற்றி அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? அப்படியிருந்தால் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம்மாதிரியான புகார் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், வேறு பலரும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார்களெல்லாம் அவ்வப்போது ஆராயப்பட்டு, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். முத்தையா : கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ளது என்ற காரணத்தினால் கைக்குத்தல் அரிசியை அமைச்சர் அவர்கள் தினம் ஒரு தடவையாவது சாப்பிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே அவர்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்காது. நான் அரிசியே சாப்பிட்டு வதில்லை (சிரிப்பு).

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1972-வது ஆண்டிலே இன்னும் கையினாலே அரிசியைக் குத்தி சாப்பிடுவது என்பது நகைப்புக்குரிய ஒன்றாகும். காலப்போக்கில், காலம் போகிற போக்கில் பழைய நிலையிலேயே நிற்காமல், அரிசியின் சத்துப் போகாமல் அரிசி அறைக்கின்ற மெஷினில் இரும்பு ராடுக்குப் பதிலாக, ரப்பர் போட்டு அறைத்தால் சத்து குறையாது. குவாலிடி ஹல்லர் என்று கையினாலே சுற்றக்கூடிய சிறிய மோட்டார் வைத்து சுற்றக்கூடிய ஒரு மெஷின் வந்திருக்கிறது. கைக்குத்தல் அரிசி சத்து பூராவும் அதில் அறைத்த அரிசியில் இருக்கிறது. ஆகவே, அதுபற்றி விளம்பரப் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கைக்குத்தலுக்குக்கூட ஓரளவுக்கு இயந்திரத்தை புகுத்தலாம் என்று எண்ணி, அதற்கு ஒரு சிறிய இயந்திரத்தைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தோம். அதைத் திருமிழிசை என்ற ஊரில் நடைமுறையில் ஓட்டிவருவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister aware that it is not only useful in meeting the health requirements, it also solves unemployment problem, because many ladies use it as their main occupation ? Will the Hon. Minister consider giving small mills for individual cottage families, so that they can use it, produce rice without destroying the protein contents, small mills electrically operated and equipped with machinery for preserving vitamins ?